**செ. கு. எண்**: 19 **நாள்**: **11.1.2012**

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 11.1.2012

30.12.2011 அன்று புதுச்சேரிக்கும் கடலூருக்கும் இடையே கரையைக் கடந்த ‘‘தானே’’ புயல் தமிழகத்தை தாக்கி, கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் மிகப் பெரும் சேதத்தை ஏற்படுத்திச் சென்றுவிட்டது. இந்தப் புயலின் கோரத் தாக்குதல் காரணமாக, கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களின் அடிப்படை கட்டமைப்புகள் முற்றிலும் சீரழிந்துவிட்டன. குடிநீர் வசதி, சாலை வசதி மற்றும் மின்சார வசதி ஆகியவை மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டன. சுமார் 4 லட்சம் குடிசை மற்றும் ஓடு வேய்ந்த வீடுகள் சேதமடைந்துள்ளன.

இதனையடுத்து, அரசு இயந்திரம் முடுக்கிவிடப்பட்டு, சீரமைப்புப் பணிகள் போர்க்கால அடிப்படையில், முழுவீச்சில் நடைபெற்று வருவதால், மக்களுக்குத் தேவையான குடிநீர் எவ்வித இடையூறும் இன்றி வழங்கப்பட்டு வருகிறது. கடலூர் மாவட்டம் முழுமைக்கும் புதிதாக மின்னமைப்பு ஏற்படுத்துவது போல உள்ள சவாலான பணியை மின்சார வாரியம் செம்மையாக செய்து வருகிறது. மின்சார வசதியை சீரமைக்கும் பணியில் 3,000 பணியாளர்கள் அல்லும் பகலும் அயராது பணிபுரிந்து வருகின்றனர். மேலும் 5,000 பணியாளர்கள் மின்சார சீரமைப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். மின்சார கட்டமைப்புக்கு ஏற்பட்ட இது போன்ற பேரழிவை சீர்செய்ய குறைந்தது 6 மாத காலம் ஆகும் என்ற போதிலும், எனது தலைமையிலான அரசின் இடைவிடாத முயற்சியினால், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் பொங்கல் திருநாளுக்குள் மின் வசதி வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

“தானே’’ புயல் காரணமாக தமிழ்நாட்டில் சுமார் 1.76 லட்சம் ஹெக்டேர் பரப்பில் பயிரிடப்பட்ட வேளாண் பயிர்களும், 0.48 லட்சம் ஹெக்டேர் பரப்பில் பயிரிடப்பட்ட தோட்டக்கலை பயிர்களும், ஆக மொத்தம் 2.24 லட்சம் ஹெக்டேர் பரப்பில் பயிரிடப்பட்ட பயிர்கள் முற்றிலும் சேதமடைந்துள்ளன. இதன் விளைவாக, விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு அவர்களது பொருளாதார நிலை வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு பயிர் சேதங்களுக்கு மத்திய அரசின் பேரிடர் நிவாரண வரையறையில் குறிப்பிட்டுள்ளதை விட அதிகமான நிவாரணத் தொகை வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். பயிர் இழப்புகளுக்காக மட்டும் 210 கோடி ரூபாய் அளவுக்கு நிவாரண உதவித் தொகை வழங்கப்படும்.

இவ்வாறு பயிர் சேதங்களுக்காக நிவாரண உதவித் தொகைகள் வழங்கப்பட்டாலும், பலா, முந்திரி போன்ற தோட்டப் பயிர்களின் மூலம் வருவாய் ஈட்டி வந்த விவசாயப் பெருங்குடி மக்களின் துயர் துடைத்திட இயலாது. எனவே, புயல் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒரு நிவாரண தொகுப்பு உதவி வழங்க நான் முடிவு செய்துள்ளேன்.

இதன்படி, புயலால் முற்றிலும் சேதமடைந்த பலா, முந்திரி மற்றும் தென்னை ஆகிய தோட்டக்கலைப் பயிர்களை மீண்டும் பயிர் செய்வதற்கு விலை ஏதுமின்றி மரக்கன்றுகள் வழங்கப்படும்.

இவற்றை பராமரிப்பதற்குத் தேவையான பராமரிப்புச் செலவுகள் மற்றும் விவசாயப் பணிகளுக்கான செலவுகள் அரசால் ஓராண்டு காலத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

விவசாய வேலையாட்களுக்கான செலவுகள் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும். தங்கள் சொந்த நிலங்களில் நில மேம்பாடு, குழி எடுத்தல் போன்ற விவசாயப் பணிகளை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கும் இந்த திட்டத்தின் படி ஊதியம் வழங்கப்படும்.

இந்த விவசாயிகள், உளுந்து, பாசிப் பயிறு, சிறு தானியங்கள் மற்றும் வேர்கடலை போன்ற ஊடு பயிர்கள் சாகுபடி செய்து வருமானம் ஈட்டும் வகையில், இவற்றை பயிரிடுவதற்கான சான்று விதைகள், உயிர் உரங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் ஆகியவை அடங்கிய சிறு தளை (Mini Kit) விலை ஏதுமின்றி ஓராண்டு காலத்திற்கு வழங்கப்படும்.

நெல், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் போன்ற பயிர்களை இழந்த விவசாயிகளுக்கு, சான்று விதைகள், உயிர் உரங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் ஆகியவை அடங்கிய சிறு தளை (Mini Kit) ஒன்று விலை ஏதுமின்றி வழங்கப்படும்.

இந்த உதவித் தொகுப்பின் மூலம் சுமார் 3.45 லட்சம் விவசாயிகள் பயன் பெறுவர். இதன் மூலம் அவர்கள் புயலால் இழந்த வாழ்வாதாரத்தை திரும்பப் பெற இயலும்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**